இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 15-02-2025

# தி.மு.க.வின் வெற்றி தீர்மானிக்கப்பட்டது

தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணியின் வாக்கு 5 விழுக்காடு அதிகரித்துள்ளது என்று இந்தியா டுடே – சி வோட்டர் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது. இப்போது நாடாளுமன்றத் தேர்தல் நடந்தாலும் இந்தியா கூட்டணியானது தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றும் என்றும் அந்தக் கருத்துக் கணிப்பு கூறி இருக்கிறது.

இதை வைத்துப் பார்க்கும் போது தி.மு.க. கூட்டணியின் வெற்றி தீர்மானிக்கப்பட்ட வெற்றியாக உள்ளது. இதனை நாம் சொல்லவில்லை. ‘இந்தியா டுடே – சி வோட்டர்’ ஆகிய இரு நிறுவனங்கள் எடுத்துள்ள கருத்துக் கணிப்புதான் சொல்கிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியானது 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. இப்போது தேர்தல் நடந்தால் இந்தக் கூட்டணி 52 விழுக்காடு வாக்குகளைப் பெறும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. 5 விழுக்காடு வாக்குகள் அதிகரித்தால், அனைத்துத் தொகுதியிலும் பல லட்சம் வாக்குகளையே வென்று விட முடியும் என்பதுதான் இதன் மூலம் தெரியவரும் உண்மையாகும்.

சி – வோட்டர் நிறுவனத்தின் இயக்குநர் யஷ்வந்த் தேஷ்முக் அளித்துள்ள பேட்டியில் இன்னும் தெளிவாக பல கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார். அதில் தி.மு.க. தலைவர் – தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் குறித்த கணிப்பானது தெளிவாக இருக்கிறது.

- ★ **தி.மு.க. தலைவருக்கு எதிராக எந்த அதிருப்தியும் இல்லை.**
- ★ **இன்றைய முதலமைச்சர், செல்வாக்கான தலைவராக இருக்கிறார்.**
- ★ **இந்தியாவின் டாப் முதலமைச்சர்கள் ஐவரில் ஒருவராக இருக்கிறார். இந்தக் கணிப்பை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எடுத்தாலும் இந்தப் பட்டியலில் இருந்து அவர் வெளியேறுவது இல்லை. இது சாதாரணமான சாதனையல்ல.**
- ★ **டாப் முதலமைச்சராக இருக்கும் அவர், மாநில மக்களாலும் சிறந்த முதலமைச்சராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்.**
- ★ **தற்போது தி.மு.க. வலுவாக இருப்பதற்கு அதன் தலைவரும் தொண்டர்களுமே காரணம்.**
- ★ **திராவிட அரசியல் – தேசியவாத அரசியல் ஆகிய இரண்டையும் தி.மு.க. மிக அழகாகக் கையாண்டு வருகிறது.**
- ★ **தமிழ்நாட்டு மக்கள் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை அவர் வாரிசு அரசியல்வாதி என்பதால் வரவில்லை. அவர் தனது தந்தையால் மட்டும் செல்வாக்குப் பெறவில்லை. ஸ்டாலினுக்கே தனியான ஈர்ப்பு சக்தி இருக்கிறது.**
- ★ **மக்களைக் கவரக் கூடிய ஈர்ப்பு சக்தி, மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இருக்கிறது.**

– இவை அனைத்தையும் சி – வோட்டர் நிறுவனத்தின் இயக்குநர் யஷ்வந்த் தேஷ்முக் தனது பேட்டியில் சொல்லி இருக்கிறார். இவை அனைத்தும் எளிதில் கிடைத்து விடும் பாராட்டு அல்ல. மக்கள் மனதில் உள்ளதைத்தான் கணிப்பாக யஷ்வந்த் தேஷ்முக் சொல்கிறார்.

**கடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னால் – தி.மு.க.வின் செல்வாக்கு, மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது செல்வாக்கு மிகமிக அதிகமாக ஆகி இருக்கிறது என்பதைத்தான் அவர் செல்லும் இடங்களில் காணப்படும் கூட்டமும், கூட்டத்தில் நிற்கும் மக்கள் முகங்களில் காணப்படும் உற்சாகமும் காட்டி வருகிறது.**

சில நாட்களுக்கு முன்னால் திருநெல்வேலி பகுதிக்கு அரசு விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள். இரண்டு நாட்களும் அவர் செல்லும் இடமெல்லாம் தேனடையைப் போல மக்கள் கூடினார்கள். பல கிலோ மீட்டர் தூரம் மக்கள் நின்று வரவேற்பு கொடுத்தார்கள். ஒருவரையடுத்து ஒருவர் என்றில்லாமல் கூட்டம் கூட்டமாக – மொத்தம் மொத்தமாக மக்கள் நின்றார்கள். மக்கள் நின்றது மட்டுமல்ல, முதலமைச்சரைப் பார்த்ததும் அவர்கள் கொடுத்த ‘ரியாக்ஷன்’ என்பது மிகமிக முக்கியமானது. அவரைப் பார்த்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது, அனைவரது முகங்களும்.

முதியோர் முதல் பெண்கள் வரை –

கல்லூரி மாணவிகள் முதல் குழந்தைகள் வரை – அனைத்துத் தரப்பினரும் ஒரே மாதிரியான வரவேற்பை அவருக்குக் கொடுத்தார்கள். அவருக்கு கைகொடுப்பதில் ஆர்வம் காட்டினார்கள். குழந்தையை அவர் கையில் கொடுத்து போட்டோ எடுத்துக் கொள்வதில் தாய்மார்கள் துடிப்பைப் பார்க்க முடிந்தது. முதலமைச்சரின் படத்தை வரைந்து வந்து கொடுத்த மாணவிகள் அதிகம்.

**இந்தக் கூட்டம் வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் மட்டுமல்ல என்பதையும் உணர்த்தியது. மாணவியர், ‘அப்பா, நீங்கள் எங்களுக்கு தரும் ‘புதுமைப் பெண்’ உதவித் தொகை கிடைக்கிறது’ என்பதைச் சொல்வதில் ஆர்வம் காட்டினார்கள். ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தில் ஆயிரம் ரூபாய் பெறுகிறேன்’ – என்று மாணவர்கள் சொல்ல முன்வந்தார்கள். ‘எனக்கு மகளிர் உரிமைத் தொகை மாதம் தோறும் சரியாகக் கிடைத்து விடுகிறது’ என்று பெண்கள் அனைவரும் சொன்னார்கள். ‘என் பிள்ளை உங்கள் காலை உணவைத்தான் சாப்பிடுது’ என்று ஒரு தாய் உருகினார். இப்படி ஒவ்வொருவரும் தங்கள் நன்றியை முதலமைச்சரிடம் சொல்வதற்காகக் காத்திருந்ததைத்தான் திருநெல்வேலிக் கூட்டம் காட்டியது.**

இதனைத்தான் புள்ளிவிபரமாக – கருத்துக் கணிப்பாக ‘இந்தியா டுடே – சி வோட்டர்’ வெளியிட்டுள்ளது. 2019 முதல் தி.மு.க. கூட்டணி தொடர் வெற்றியைப் பெற்று வருகிறது. அடுத்து வரப்போகும் தேர்தலில் சாதாரணமான வெற்றியை அல்ல, மகத்தான வெற்றியைப் பெறப் போவதையும் உறுதி செய்கிறது இக்கணிப்பு.

‘இந்தியா டுடே – சி வோட்டர்’ கணிப்பானது உண்மையை உரக்கச் சொல்லி இருக்கிறது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.2.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 6 கோடியே 51 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கோடியே 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கிருஷ்ணாஜிபட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் சிங்கவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஆயுஷ் பிரிவு பல்நோக்குக்கூடம் மற்றும் சுகாதாரத் தொகுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா.விஜயராஜ் குமார், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திருமதி. மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மதுரை, தேனி, புதுக்கோட்டை மாவட்டங்களில் மொத்தம்

# ரூ.8.93 கோடியில் பள்ளிகள் - நூலகம் - ஆய்வுக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 15 -**

**மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் கூடுதல் கட்டடங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளியில் நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடங்கள் என மொத்தம் ரூ.8.93 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.2.2025) தலைமைச்செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 6 கோடியே 51 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கோடியே 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கிருஷ்ணாஜிபட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் சிங்கவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஆயுஷ் பிரிவு பல்நோக்குக்கூடம் மற்றும் சுகாதாரத் தொகுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தையும், 1989ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தையும், 2007 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககத்தையும் ஏற்படுத்தினார். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம்மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் சமூக நீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

**மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

நபார்டு வங்கி நிதி உதவியுடன் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், மதுரை மாவட்டம், ஆ. புதுப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியில்

2 கோடியே 57 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவிலும், பூசலபுரம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் 83 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவிலும், தேனி மாவட்டம், வெள்ளையம்மாள்புரம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலும், இராஜதானி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் 2 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகளை மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

புதுக்கோட்டை மாவட்டம், கிருஷ்ணாஜிபட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 97 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடம் மற்றும் 47 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அறிவியல் ஆய்வகக் கட்டடம்; சிங்கவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 96 இலட்சம் ரூபாய் செலவில் ஆயுஷ்பிரிவு பல்நோக்குக்கூடம், மருத்துவ உபகரணங்கள், சுகாதாரத் தொகுதி கட்டடம் என 2 கோடியே 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவிலான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா.விஜயராஜ் குமார், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திருமதி. மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை – சென்ட்ரல் பகுதியில்

# ரூ.350 கோடி மதிப்பில் 27 அடுக்குமாடிக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, பிப். 15 -**

**சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் சார்பில் சென்னை சென்ட்ரல் பகுதியிலுள்ள மத்திய சதுக்கத்தில் தரைத்தளம் மற்றும் 27 அடுக்குமாடியுடன் ரூ.350 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சென்ட்ரல் கோபுரக் கட்டடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.2.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை சென்ட்ரல் பகுதியிலுள்ள மத்திய சதுக்க வளாகத்தில் சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் சார்பில் தரைத்தளம் மற்றும் 27 அடுக்குமாடியுடன் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சென்ட்ரல் கோபுரக் கட்டடத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

சென்னை சென்ட்ரல் பகுதியை ஒரு உலகத்தரம் வாய்ந்த அடையாளமாக மேம்படுத்தும் நோக்கில், மத்திய சதுக்கத் திட்ட கட்டுமானப் பணிகளை சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், புறநகர் சென்ட்ரல் இரயில் முனையம், பூங்கா இரயில் நிலையம் (புறநகர்), பூங்கா நகர் இரயில் நிலையம் (துரித இரயில் போக்குவரத்து அமைப்பு). சென்ட்ரல் மெட்ரோ நிலையம், ரிப்பன் மாளிகை (பெருநகர சென்னை மாநகராட்சி), தென்னக இரயில்வே தலைமையகம் மற்றும் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகியவற்றிற்கிடையே பொதுமக்கள் எளிதில் சென்று வருவதற்கு ஏதுவாக, மத்திய சதுக்கம் ஒரு முத்தாய்ப்பான பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது.

**சென்ட்ரல் கோபுரக் கட்டடம்**

சென்னை சென்ட்ரல் பகுதியில் பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பினை மேலும் சிறப்பூட்டும் வகையில் முத்தாய்ப்பு திட்டமாக சென்னை சென்ட்ரல் கோபுரத் திட்டத்தை செயல்படுத்தி, இப்பகுதியில் அமையப் பெற்றுள்ள பன்முகப் போக்குவரத்து அமைப்புகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாகவும் பல்வேறுபட்ட பயன்பாடுகளினால் இவ்விடம் ஓர் அடையாள சின்னமாக மாற்றிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் 50:50 என்கிற சமவீத பங்களிப்புடன், கூட்டு முயற்சி அடிப்படையில், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் சென்னை சென்ட்ரல் கோபுரக் கட்டுமான பணிகளைச் செயல்படுத்தவுள்ளது.

சென்னை சென்ட்ரல் கோபுரக் கட்டடம் 14,280 சதுர மீட்டர் நிலப்பரப்பளவில், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள 4 அடித்தளங்களுடன், தற்போது கட்டப்படவுள்ள தரைத்தளம் மற்றும் 27 அடுக்குமாடிகளுடன் (120 மீட்டர் உயரம்) அமைக்கப்படவுள்ளது. தரைதளம் முதல் 4 தளங்கள் வரை சில்லரை மற்றும் வணிக பயன்பாட்டிற்காகவும், 5 முதல் 24 தளங்கள் வரை அலுவலகங்களுக்கான பயன்பாட்டிற்கும், 25வது தளம் சேவைகளுக்காகவும், 26 மற்றும் 27வது தளங்கள் வணிக நோக்கத்திற்காகவும் கட்டமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று (14.02.2025) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் ஆர்.காந்தி, எஸ்.எம். நாசர், சி.வி. கணேசன், சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் தலைவர்/நிருவாக இயக்குநர் முனைவர் எஸ். விஜயகுமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர்கள், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.